# <u>திருவண்ணாமலை நகரமன்றக் கூட்டம்</u>

## <u>சாதாரணக் கூட்ட அறிவிப்பு</u>

**31.07.2019ம் தேதி புதன் கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ள திருவண்ணாமலை நகரமன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் –**

**முன்னிலை : திரு. Y. சுரேந்திரன் BE., தனி அலுவலர் மற்றும் நகராட்சி பொறியாளர் (ம) ஆணையாளர் (பொ) திருவண்ணாமலை நகராட்சி.**

**<u>பொருட்கள்</u>**

**குறள் :–**

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்**

### தீர்மானம்

**329.** இந்நகராட்சியில் பொதுப் பிரிவில் இரவு காவலராகப் பணிபுரிந்து வரும் திரு.ச.சிவானந்தம் என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக திருப்பத்தூர் நகராட்சிக்கு பணியிட மாறுதல் கோரியுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு: –**

1. அனுமதி வழங்கலாம்

### தீர்மானம்

**330 .** இந்நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் மற்றும் இதர சாதனங்கள் 2019–2020ம் ஆண்டுக்கான ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள (Annual Maintenance) 12.07.2019 ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்டவைகள் முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீடு ரூ. லட்சம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | Get . Computer<br>No. 8 Popular Complex , Vellore -4 | 2.50 | ரூ. 2,30,700 |
| 2 | Brindha Agencies<br>No.15 S.K. Complex , Vellore –4 | | ரூ. 2,45,050 |

**அலுவலக்குறிப்பு: –**

1. மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1ல் கொடுத்துள்ள M/s Gets Computer வேலூர் –4 அவர்களின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதை அனுமதிக்கலாம்
2. இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

**331 .** இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவு, பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு மற்றும் வருவாய் பிரிவுகளில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தேவையான கணினிகள் புதியதாக வாங்கி வழங்க கோரியுள்ளதால், கீழ்கண்டவாறு புதிய கணினிகள் 17 எண்ணிக்கையில் வாஙக வேண்டியுள்ளதால், அதற்கான தோராய செலவின தொகை ரூ.9,00,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பிரிவு விவரம் | தேவைப்படும் கணினிகளின் எண்ணிக்கை | இருப்பில் உள்ள கணினிகளின் எண்ணிக்கை | ELCOT நிறுவனத்தில் வாங்க வேண்டிய கணினிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | வருவாய் பிரிவு | 9 | 0 | 9 |
| 2 | பொது சுகாதார பிரிவு | 7 | 4 | 3 |
| 3 | பொறியியல் பிரிவு | 3 | 1 | 2 |
| 4 | நகரமைப்பு பிரிவு | 3 | 1 | 2 |
| | **மொத்தம்** | **22** | **6** | **16** |

| Item Code | Item Description | Item Configuration |
|---|---|---|
| 32809 DT 203W | Desktop Computer - Intel i3 4150 with Preloaded Windows Operating System. | Intel core i3-4150 Processor at 3.5Ghz, 4GB DDR3 @ 1600 MHz upgradeable up to 16 GB, 3 PCI/PCI Express Slots. 1Gbps Network card, 4 USB Ports, 2 PS 2 Port, 18.5 inch TFT /LCD TCO Certified Colour Monitor, 500 GB HDD, DVD Writer, Membrane Keyboard, Optical Mouse, 3Bays with preloaded Windows 8 Professional with Media and License. Anti Virus with 1 Year License. |

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். சி1 / 2983 / 2019

**தீர்மானம்**

**332.** இயக்குநர் தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 322/2019/அ3 நாள் 11.07.2019 ந் தேதிய கடிதத்தில் நகராட்சியில் பணிபுரியும் கணக்காளருக்கான புத்தாக்க பயிற்சி 15.07.2019 முதல் 22.07.2019 நடைபெறுவதால் பயிற்சிக்கான கட்டணம் நாள் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் 5 நாட்களுக்கு ரூ.5000/- மேற்படி பயிற்சி நிறுவனத்திற்கு அனுப்பி வைக்க மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் முன் ஒப்புதல் பெற்று தொகை ரூ.5000/- செலுத்தமைக்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**ந.க.எண். 2874/2019/சி1**

**தீர்மானம்**

**333.** இந்நகராட்சி வார்டு எண்.28 அண்ணாநகர் விறகு மண்டி தெருவில் மழைநீர் வடிகால்வாய் இல்லாததால் மழைநீர் தெருவில் செல்வதால் பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளதால், புதியதாக மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.6.50 லட்சம் (ரூபாய் ஆறு லட்சத்து ஐம்பதாயிரம்) க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்.

**தீர்மானம்**

**334.** இந்நகராட்சி வார்டு எண்.18 தவசிகுளம் பகுதியில் உள்ள கழிவறைக்கு தண்ணீர் வசதி, மின்வசதி மற்றும் கழிவறைக்கு செல்லும் பாதை இல்லாததால் அப்பகுதியில் வசிக்கும் பொது மக்கள் கழிவறைகள் பயன்படுத்த சிரமம் ஏற்படுகிறது. எனவே மேற்படி கழிவறைக்கு தண்ணீர் வசதிகள் செய்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.4.00 லட்சம் (நான்கு லட்சம்)க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்.

**தீர்மானம்**

**335.** இந்நகராட்சி வார்டு எண்.28 அண்ணாநகர் - 7வது தெருவில் உள்ள திறந்தவெளி கிணறு அருகில் மழைநீர் வடிகால்வாய் பழுதடைந்து உள்ளதால் கழிவுநீர் கிணற்றில் செல்வதால் அசுத்தம் ஏற்படுவதன் தண்ணீர் பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. எனவே புதியதாக கிணறு சுற்று வடிகால்வாய் அமைக்க ஆகும் தோராய செலவினம் ரூ.3.00 லட்சம் (மூன்று லட்சம்)க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்.

**தீர்மானம்**

**336.** திருவண்ணாமலை நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் தேவையான அபராத தொகை ரசீது புக் 1 முதல் 50 வரை பக்கம் கொண்ட 20 புத்தகம் வரப்பெற்றது.

அபராத தொகை ரசீது புக் - 20 புத்தகம்

மேற்கண்ட பதிவேடுகள் திருவண்ணாமலை மாவட்ட எழுது பொருள் மற்றும் கூட்டுறவு சங்கம் லிட் அச்சடிக்க செலவினம் மதிப்பீட்டுத் தொகை ரூ.**9,500**/- மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி எதிர்நோக்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்**

**337.** இந்நகராட்சியின் பயன்பாட்டில் உள்ள (1) பாதாள சாக்கடை திட்டம் STP பண்டார குளம் (2) ஆடு அறுக்கும் தொட்டி (Morderan Slaughter house) (3) உயிரி ஆவி முறை மின்னாக்கி (Bio - Methnation Plant) ஆகிய பணிகளுக்கு கட்டப்பட்டுள்ள கட்டிட பராமரிப்பு புதுபிப்பு கட்டணம் 2019-2020 நிதி ஆண்டுக்கு கீழ்க்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

| | |
|---|---|
| 1. பாதாள சாக்கடை திட்டம் STP | ரூ. 232720 |
| 2. Bio - Methanation Plant | ரூ. 65200 |
| | -------------------- |
| | ரூ. 3,12,720 |

ரூ.312720/-ஐ தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

**338.** நகராட்சிகளின் நிர்வாக ஆணையரக சுற்றறிக்கை எண். 17464/2018/UPA - 1 நாள் **03.07.2019** வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்கள், சாலையோர வியாபாரிகள் மற்றும் AAY குடும்ப அட்டைகள் வைத்திருக்கும் நபர்கள், நலிவுற்ற மக்கள் ஆகியோர்களின் விடுப்பட்ட விரவங்களை சேகரிப்பது மற்றும் ஏற்கனவே கணக்கெடுப்பு செய்து Onlineல் பதிவேற்றம் செய்த விவரங்கள் மொத்தம் 39 வார்டுகள் உட்பட 28,246 ஆகும். இதை பிரதி எடுப்பதற்கு, ஏற்படும் செலவினம் ரூ. 1,00,000/-க்கும், திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு சங்கம் லிட் அவர்கள் பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்

2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி பணி மேற்கொண்டமைக்கும், செலவினத் தொகை வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 2738/2019/எச்1

**தீர்மானம்**

**339.** இந்நகராட்சி திரு. கோபால் த/பெ. முனியப்பக் கவுண்டர் மற்றும் பலர் சென்னை உயர்நிதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண். 20241/2008ல் வழக்கினை சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திருமதி. ராஜலட்சுமி அவர்களை நியமிக்கவும் வழக்கின் செலவினத் தொகை ரூ. 15000/- ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியில் ரூ. 15000/- ஈடு செய்யலாம்
3. மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி எடுத்த நடவடிக்கைக்கு

ந.க.எண். 3211/2008/எப்1

**தீர்மானம்**

**340.** கோட்ட பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை (க.ப.) அவர்களின் கடிதம் ந.க.எண். 232/2019/211 நாள் 28.02.2019 ம் தேதிய கடிதத்தில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் வீட்டிணைப்புகள் வழங்க விடுப்பட்ட பகுதியில் நெடுஞ்சாலைத்துறைக்குட்பட்ட சாலைகளில் உள்ள ஆள் இறங்கும் குழியில் (Manhole) ல் இருந்து வீட்டு இணைப்புகள் வழங்க ஏதுவாக சாலைகளை வெட்டி எடுக்க ஆகும் செலவினம் ரூ. 4476500/- வழங்குமாறு தெரிவிக்கப்படுகிறது

இதன்படி மேற்படி பணிகள் மேற்கொள்ள ரூ. 44,76,500/- ஐ கோட்ட பொறியாளர் நெடுஞ்சாலை துறைக்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியில் ரூ. 15000/- ஈடு செய்யலாம்
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்றுத் தொகை வழங்கியதையும் அனுமதிக்கலாம்

**தீர்மானம்**

**341.** இந்நகராட்சி வார்டு எண். 6 பேகோபுரத்தெரு நகராட்சி ஆரம்ப பள்ளியில் LKG மற்றும் UKG வகுப்புகள் தொடங்கப்படவுள்ளதால் பள்ளியில் நுழைவுவாயில் மாற்றி அமைத்தல் கழிவறைகள் அமைத்தல் டைல்ஸ் பதித்தல், கதவுகள் மாற்றுதல் குடிநீர் வசதிகள் செய்தல், மின்விளக்கு வசதிகள் செய்தல் மற்றும் இதர பணிகள்

மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ. 4.20 லட்சம் (நான்கு லட்சத்து இருபதாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. கல்வி நிதியின் கீழ் செலவிடலாம்.

**தீர்மானம்**

**342.** இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில், பொது மக்களின் நலன் கருதியும் அனைத்து அரசு நகராட்சி மற்றும் தனியார் பள்ளிகளுக்கு டெங்கு நோய் தடுப்பு மருந்து நிலவேம்பு குடிநீர் வழங்க இருப்பதால், நிலவேம்பு பவுடர் சுமார் 600KG தேவையாக உள்ளது. மேற்படி நிலவேம்பு பவுடர் வாங்க IMCOPS, CHENNAI அவர்களிடத்தில் விலைப்புள்ளி கோருவதற்கும் அதற்காக ஏற்படும் தோராய செலவினம் ரூ.9,00,000/- (ரூபாய் ஒன்பது லட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்

ந.க.எண். 3522/2018/எச்1

**தீர்மானம்**

**343.** இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் கீழ்கக்ண்ட வாகனங்களுக்கு ஆயுள் காப்பீட்டு புதுப்பித்த வித்தியாசத் தொகை The New India Assurance Company Ltd., Thiruvannamalai அவர்களுக்கு தொகை ரூ.15,713/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| வரிசை எண் | வாகன எண் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | TN2B J 4102 | 1020/- |
| 2 | TN25B J 4145 | 1020/- |
| 3 | TN25B J 4160 | 1020/- |
| 4 | TN25B J 4104 | 1020/- |
| 5 | TN25B J 4137 | 1020/- |
| 6 | TN25B J 4179 | 1020/- |
| 7 | TN25B K 1240 | 3178/- |
| 8 | TN25B B 0042 | 859/- |

| | | |
|---|---|---|
| 9 | TN25A 7249 | 5555/- |
| | மொத்தம் | 15713/- |

**அலுவலகக் குறிப்பு**

1. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி வாகனங்களை புதுப்பித்த வித்தியாசத் தொகைக்கு ஆகும் செலவினம் ரூ.15,713/- ஐ New India Assurance Company Ltd, Thiruvannamalai அவர்களுக்கு மன்றத்தின் முன் அனுமதி பெற்று மேற்படி தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

**344.** இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தின் ஆள் இறங்கும் தொட்டியில் உள்ள கசடுகளை அகற்றும் பணிகளை மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.4.00 லட்சம் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. இப்பணிகளை நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்

கோப்பு எண். 1625/2019/இ2

**தீர்மானம்**

**345.** இந்நகராட்சியின் பாதாள சாக்கடை திட்டத்தின் ஆள் இறங்கு தொட்டியில் உள்ள கசடுகளை அகற்றும் பணிகளை மேற்கொள்ள நகராட்சி சட்டம் 1920 பிரிவு (15)ன் கீழ் விலைப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) | கொடுத்துள்ள விலைப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | திரு. ஆர். மாரிமுத்து<br>கல்லரைப்பாடி கிராமம்<br>திருவண்ணாமலை | **4.00** | 0.21 % குறைவு |
| 2 | திரு. கே. சிவாஜி<br>10எ/1 மாந்தோப்பு தெரு<br>திருவண்ணாமலை | | 1.23 % அதிகம் |
| 3 | அஸ்வினி கன்ஸ்ட்ரக்ஷன்<br>எண். 37, பேகோபுரம் 10வது தெரு<br>திருவண்ணாமலை | | 2.20 % அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வ்ரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.ஆர்.மாரிமுத்து, திருவண்ணாமலை அவர்களின் விலைப்புள்ளியை அங்கீகரித்து அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றத்தின் தகவலுக்கு பதியப்படுகிறது.

**தீர்மானம்**

**346.** இந்நகராட்சி பகுதியில் உள்ள தெருவிளக்கு உயர்மின் கோபுர விளக்கு (High Mash Light) மின்கம்பங்களில் மின்கசிவு ஏற்பட்டு விபத்துகள் ஏற்படும் அபாயம் உள்ளதாலும் தற்போது மழைக்காலம் என்பதால் மின்கசிவு ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே பொது மக்களின் நலன் கருதி மின் இணைப்பில் புதிய கேபிள், எர்த் பதித்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.4.50 லட்சம் (நான்கு லட்சத்து ஐம்பதாயிரம்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்

ந.க.எண். 3131/2019/இ1

**தீர்மானம்**

**347.** இந்நகராட்சிப் பகுதியிலுள்ள தெரு விளக்கு உயர்மின் கோபுர விளக்கு (High Mass Light) மின்கம்பங்களில் மின்கசிவு ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு புதிய கேபிள் மாற்றுதல் மின்சாதன பொருட்கள் மாற்றுதல் மற்றும் இதரப்பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு 31.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ பாலாஜி எலக்ட்ரிக்கல்ஸ் தியாகாரய நகர், சென்னை -17 | 4.50 | 0.13 % குறைவு |
| 2 | Hi-Tech Tronics , மாம்பலம், சென்னை-33 | | 0.91 % அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள ஸ்ரீ பாலாஜி எலக்ட்ரிக்கல்ஸ் சென்னை -17 என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம்**

**348.** இந்நகராட்சி வார்டு எண்.1, முதல் 39 வரை உள்ள பகுதியில் உள்ள தெருவிளக்குகள் இயங்கும் சுவிட்ச் பெட்டிகள் பழுதடைந்து உள்ளதால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே பொது மக்களின் நலன் கருதி புதியதாக சுவிட்ச் பெட்டிகள் பொறுத்துதல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.**6.00** லட்சம் (ரூபாய் ஆறு லட்சம்) க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்

**தீர்மானம்**

**349.** இந்நகராட்சியின் வார்டு எண்.1 முதல் 39 வரை உள்ள பகுதியில் உள்ள தெருவிளக்கு மின்கம்பத்தில் மீட்டர் பெட்டி பொருத்துதல் மற்றும் இதரப்பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு 01.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ பாலாஜி எலக்ட்ரிக்கல்ஸ் தியாகாரய நகர், சென்னை -17 | 6.00 | 0.14 % குறைவு |
| 2 | Hi-Tech Tronics , மாம்பலம், சென்னை-33 | | 1.64 % அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள ஸ்ரீ பாலாஜி எலக்ட்ரிக்கல்ஸ் சென்னை -17 என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம்**

**350.** இந்நகராட்சி வார்டு எண். 01, 06, 17 மற்றும் 18ல் வசிக்கும் பொது மக்கள் தங்களது பகுதியில் தெருவிளக்கு இல்லாததால் சிரமப்படுவதாக நேரில் தெரிவித்துள்ளனர். எனவே பொது மக்களின் நலன் கருதி புதியதாக 70W LED தெருவிளக்கு வாங்கி பொறுத்த ஆகும் தோராய செலவினம் ரூ. 3.25 லட்சம் (மூன்று லட்சத்து இருபத்தைந்தாயிரம்)க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்

**தீர்மானம்**

**351.** இந்நகராட்சி வார்டு எண். 01, 06, 17 மற்றும் 18ல் ஆகிய வார்டு பகுதிகளில் 70W LED தெருவிளக்கு சப்ளை செய்து, பொருத்துதல் பணி மேற்கொள்ளும் பணிக்கு 31.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது. .

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ பாலாஜி எலக்ட்ரிக்கல்ஸ் தியாகாரய நகர், சென்னை -17 | 3.25 | 0.87 % குறைவு |
| 2 | Hi-Tech Tronics , மாம்பலம், சென்னை-33 | | 2.61 % அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள ஸ்ரீ பாலாஜி எலக்ட்ரிக்கல்ஸ் சென்னை -17 என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம்**

**352.** இந்நகராட்சியில் அனைத்து பிரிவுகளில் உள்ள கணினிகளுக்கு கீழ்கண்ட இனத்தில் புதிய பிரிண்டர்கள் **12** எண்ணிக்கையில் வாங்க வேண்டியுள்ளதால், அதற்கான தோராய செலவின தொகை ரூ**.1,70,000/–** க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| Sl. No | Item Code | Item Description | Item Configuration |
|---|---|---|---|
| 1 | 32717 LI-031C | Laser Printer A4 25 PPM-Duplex Unit, with Wi-Fi Network | Laser Technology, Speed-25ppm, Resolution-600x600 dpi, Paper Supply 150 sheets or above, Media Sizes-Letter, Legal, Executive, Post Cards, Envelopes, Media Types-Paper (Plain, Recycled, Envelopes, Transparencies, Labels and Card Stock) Duplex, Net Work with Wi-Fi, Interface-USB, RJ-45, Operating system Windows and Linux (Driver Software Mandatory) Compatibility |

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். சி**1/2499/2019**

**தீர்மானம்**

**353.** இந்நகராட்சி புதியதாக கட்டியுள்ள நகராட்சி அலுவலகத்திற்கு பழைய அலுவலகத்தில் இருந்து புதிய அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்ய வேண்டியுள்ளதால் புதியதாக பூட்டு வாங்குதல், (2) கோணிப்பைகள் வாங்குதல் (3) கழிவறைகளுக்கு புதியதாக பக்கெட் வாங்குதல் (4) அலங்கார செடிகள் பராமரித்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.45,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்

**தீர்மானம்**

**354 .** இந்நகராட்சியின் திருக்கோவிலூர் சாலையில் புதிய நகராட்சி அலுவலகக் கட்டிடத்திற்கு இடம் பெயர்வு செய்ய ஏதுவாக, புதியதாக பூட்டு வாங்குதல், கோணிப்பைகள் வாங்குதல், கழிவறைகளுக்கு புதியதாக பக்கெட், ஜங்க் வாங்குதல் மற்றும் அழகு செடிகள் வாங்குதல் மற்றும் புல் தரை பராமரிக்கவும் மற்றும் இதரப்பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு 29.06.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள விலைப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| Sl.No | Description of Work | Unit | Rate Rs. | | |
|---|---|---|---|---|---|
| | | | Surya Construction Tiruvannamalai | K.Sivaji Tiruvannamalai | Aswini Construction Tiruvannamalai |
| 1 | Supply and delivery of Plants and landscaping maintenance charges etc., complete. | Job | 27500 | 28000 | 28200 |
| 2 | Supply and delivery of Lock and key (15 set) etc., complete | Job | 4500 | 4700 | 4900 |
| 3 | Supply and delivery of Bora bag etc., (350 Nos.) | Job | 7000 | 7200 | 7300 |
| 4 | Supply and delivery of Bucket and Mug etc., complete | Job | 6000 | 6300 | 6400 |

**அலுவலகக்குறிப்பு**

1. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s.Surya Construction, திருவண்ணாமலை அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம்**

**355.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது மக்களுக்கு உலகலாப்பாடி தென்பெண்ணை ஆற்றங்கரை கீழ் பகுதிகளில் அமைந்து உள்ள நிலையத்திலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநிரின் தரத்தை பரிசோதிக்க கீழ்க்கண்ட பகுதிகளில் குடிநீர் பெறப்பட்டு அதன் தரத்தை பரிசோதிக்க TWAD Board திருவண்ணாமலை பரிசோதனை கூடத்திற்கு அனுப்பப்பட்டுள்ள இடங்கள் பின்வருமாறு

1. அண்ணாநகர் நீரேற்று நிலையம் - II Scheme
2. அண்ணாநகர் நீரேற்று நிலையம் - III Scheme
3. சோமவாரகுளம் நீரேற்று நிலையம்
4. வ.ஊ.சி. நகர் (Public Tap)
5. பூமாந்தாகுளம் (Public Tap)

மேற்கண்ட இடங்களில் பெறப்பட்ட குடிநீர் பரிசோதனை செய்ய ரூ.1000/- வீதம் மொத்தம் ரூ.5000/- A.O. TWAD VTC க்கு Payable at Vellore என்ற முகவரிக்கு DD யாக செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. குடிநீர் நிதியின் கீழ் செலவிடலாம்
3. இப்பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண். 942/2018/இ2

**தீர்மானம்**

**356.** இந்நகராட்சி பயன்பாட்டில் உள்ள பாதாள சாக்கடை (Jet Radding) TN25AL 9353 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுது நீக்கம் செய்து தோராய செலவினம் ரூ.**6500**/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. இச்செலவினம் குடிநீர் நிதியின் கீழ் செலவிடலாம்
3. இப்பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை மன்றம் ஏற்கலாம்

**ந.க.எண். 2818/2019/இ2**

**தீர்மானம்**

**357.** இந்நகராட்சி பயன்பாட்டில் உள்ள பாதாள சாக்கடை (Jet Radding ) TN25 A 9353 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகள் நீக்கம் செய்ய 22.07.2019ல் பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் முடிய செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | கொடுத்துள்ள விலைப்புள்ளி |
|---|---|---|
| 1 | **ஜவஹர் ஆட்டோ ஒர்க்கஸ்<br>நெ. 77B மத்தலாங்குளத் தெரு<br>திருவண்ணாமலை** | **ரூ. 6500/-** |
| 2 | **கண்ணம்மாள் ஆட்டோ ஒர்க்கஸ்<br>நெ.18, முத்து விநாயகர்கோவில் St<br>திருவண்ணாமலை.** | **ரூ. 6800/-** |

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கொடுத்துள்ள M/s ஜவஹர் ஆட்டோ ஒர்க்கஸ் திருவண்ணாமலை நிறவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை ஏற்கலாம்

2. இப்பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண். 2818/2019/இ2

**தீர்மானம்**

**358.** திருவண்ணாமலை நகராட்சி ஆணையருக்கு எதிராக திருமதி. சாந்தி க/பெ.வேலு என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண். 18649/2019 வழக்கினை சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு.வி. ஜெயப்பிரகாஷ் அவர்களை நியமிக்கவும் வழக்கின் செலவினத் தொகை ரூ.15000/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. வருவாய் நிதியில் ரூ. 15000/- ஈடு செய்யலாம்
3. மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி எடுக்க நடவடிக்கை

ந.க.எண். 1625/2019/ எப்1

**தீர்மானம்**

**359.** இந்நகராட்சியின் வார்டு எண்.18 கீழ்நாத்துர் காலணி மற்றும் அம்மணியம்மன் தெரு ஆகிய தெருக்களில் ஆழ்துளை கிணறுடன் கூடிய மின் விசைப்பம்பு அமைக்கும் பணிக்கு 11.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | அபிநயா கன்ஸ்ட்ரக்ஷன்<br>நெ.836/47 வேட்டவலம் ரோடு<br>திருவண்ணாமலை | 4.00 | 0.18 % குறைவு |
| 2 | திரு. எம். கமலக்கண்ணன்<br>அருணகிரிபுரம் 1வது தெரு<br>திருவண்ணாமலை | | 0.80 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள அபிநயா க்ன்ஸ்ட்ரக்ஷன் திருவண்ணாமலை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண். 2671/2019/இ2

**தீர்மானம்**

**360.** இந்நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 20 வரை உள்ள பகுதியில் உள்ள சிறுமின்விசை பம்பு ஆழ்துளை கிணறு மற்றும் மின் மோட்டார் திறந்தவெளி கிணறு பழுதினை மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.9.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. **அனுமதி வழங்கலாம்**
2. **குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளலாம்**

**ந.க.எண். 1622/2019/இ2**

**தீர்மானம்**

**361.** இந்நகராட்சியின் வார்டு எண்.1 முதல் 20 வரை உள்ள பகுதியில் உள்ள ஆழ்துளை கிணறு மோட்டார்கள், பழுதினை சரி செய்யும் பணிக்கு 26.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | திரு.வி.என். பிரகாஷ்<br>நெ. 26/38 கரிகாலன் தெரு, தி.மலை | 9.00 | 0.10 % குறைவு |
| 2 | எஸ். நந்தினி,கரிகாலன் தெரு, திருவண்ணாமலை | | 0.60 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.வி.என். பிரகாஷ் திருவண்ணாமலை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண். 1622/2019/இ2

**தீர்மானம்**

**362.** இந்நகராட்சியின் வேட்டவலம் சாலையில் குடிநீர் பிரதான பைப் லைன் பதிக்கும் பணிக்கு 18.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள ஒப்ந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | G.V. Construction, பைபாஸ் சாலை திருவண்ணாமலை | 3.75 | 0.13 % குறைவு |
| 2 | திரு. கே. சிவாஜி நெ. 10எ/1, போளூர் ரோடு, திருவண்ணாமலை | | 0.88 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள M/s.G.V. Construction, திருவண்ணாமலை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம்**

**363.** The New India Insurance Company Ltd நிறுவனத்திடமிருந்து கேட்பு பட்டியல் வரப்பெற்றுள்ளது எனவே கீழ்க்கண்ட வாகனங்களுக்கு 2019-2020ம் ஆண்டுக்கு காப்பீட்டு தொகை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வண்டி எண் | காலம் | தொகை |
|---|---|---|---|
| 1 | TN 25 AD 5661 | 05.07.2019 to 04.07.2019 | ரூ. 15545 |
| 2 | TN 25 C 0254 | 05.07.2019 to 04.07.2019 | ரூ. 17804 |
| 3 | TN 25 M 2863 | 05.07.2019 to 04.07.2019 | ரூ. 31894 |
| 4 | TN 25 2969 | 05.07.2019 to 04.07.2019 | ரூ. 37597 |
| | | | **102840** |

**அலுவலகக்குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. இப்பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்த மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம்**

**364.** The New India Insurance Company Ltd நிறுவனத்திடமிருந்து கேட்பு பட்டியல் வரப்பெற்றுள்ளது எனவே கீழ்க்கண்ட வாகனங்களுக்கு 2019-2020ம் ஆண்டுக்கு காப்பீட்டு தொகை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வண்டி எண் | காலம் | தொகை |
|---|---|---|---|
| 1 | TN 25 J 3867 | 05.07.2019 to 04.07.2019 | ரூ. 13218 |

**அலுவலகக்குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. இப்பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்த மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம்**

**365. இந்நகராட்சி பயன்பாட்டில் உள்ள TN25 AD 5661 ஈப்பு வாகனம் Jain Cars & Auto Sales PVT Ltd நிறகூனத்திடம் நேரடியாக பழுது நீக்கம் செய்தமைக்கு செலவினம் ரூ.41690/- வழங்க மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.**

**அலுவலகக்குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. இச்செலவினம் வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கவும் மன்றம் ஏற்கலாம்

**தீர்மானம்**

**366.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 39 வார்டுகள் அமைந்துள்ளது. மத்திய அரசின் ஜல் சக்தி அபியான் திட்டத்தின் கீழ் நீர் பாதுகாப்பு மற்றும் மழைநீர் சேகரிப்பு குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த நாடகங்கள், பேரணிகள், பேனர்கள், கலந்துரையாடல்கள், போஸ்டர், சுவர் விளம்பரம், சுலோகன், கட்டுரை எழுதுகள், மாரத்தான் அணிவகுப்பு ஆகிய நிகழ்ச்சிகள் நடத்திட தோராயமாக செலவினத் தொகை ரூ.50,000/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் ரூ. 50,000/- ஐ ஈடு செய்யலாம்

ந.க.எண். 2824/2019/எப்1

**தீர்மானம்**

**367.**இந்நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள சமுத்திரம் ஏரி நீரேற்று நிலையத்தில் உள்ள மின் மோட்டார்கள் போர்வெல் மோட்டார்கள் மற்றும் ஸ்டாட்டர்கள் பழுது நீக்குதல் பணிகள் மேற்கொள்ள 31.05.2019 அன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டதை முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) | கொடுத்துள்ள விலைப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ ஏழுமலையான் ரீ வைண்டிங் இஞ்ஜிரிங் ஒர்க்கஸ் நெ. 64 கன்னிக்கோயில் தெரு, தி.மலை | 1.80 | ரூ. 179225/– |
| 2 | ஜெயபால் ரீ வைண்டிங் ஒர்க்கஸ் நெ. 59 ராஜராஜன் தெரு, திருவண்ணாமலை | | ரூ. 180550/– |
| 3 | குப்புசாமி ரீ வைண்டிங் ஒர்க்கஸ் நெ. 90/2 சூர்யா நகர் திருவண்ணாமலை | | ரூ. 181550/– |

அலுவலகக் குறிப்பு

1. மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கொடுத்துள்ள M/s ஸ்ரீ ஏழுமலையான் ரீவைண்டிங், திருவண்ணாமலை என்பவரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை அனுமதிக்கலாம்
2. இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மேலும் தொகை வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

**368.** இந்நகராட்சியில் ஜல்சக்தி அபியான் 2019-2020 திட்டத்தின் கீழ் நீர் பாதுகாப்பு மற்றும் மழைநீர் சேகரித்தல் பணிகளை அரசு கட்டிடங்களில் அமைக்குமாறு தெரிவிக்கப்பட்டது. இதன்படி ஒருங்கிணைந்த குழந்தைகள் சத்துணவு மையங்களில் (ICDS) 36 இடங்களில் மேற்படி மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு அமைக்க ஆகும் தோராய செலவினம் ரூ. 3.25 லட்சம் (ரூபாய் மூன்று லட்சத்து இருபத்து ஐந்தாயிரம்) க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - 1. **அனுமதி வழங்கலாம்**

1. **வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்**

**தீர்மானம்**

**369.** இந்நகராட்சியில் ஜல் சக்தி அபியான் - 2019-2020 திட்டத்தின் கீழ் நீர் பாதுகாப்பு மற்றும் மழைநீர் சேகரித்தல் பணிகளை அரசு கட்டிடங்களில் அமைக்குமாறு தெரிவிக்கப்பட்டது. இதன்படி நகராட்சி பள்ளிகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்க ஆகும் தோராய செலவினம் ரூ. 3.00 லட்சம் (ரூபாய் மூன்று லட்சம்) க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. **அனுமதி வழங்கலாம்**
2. **கல்வி நிதியின் கீழ் செலவிடலாம்**

**தீர்மானம்**

**370.** இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள Scheme - III ன் 150HP மோட்டாரின் பம்பு பேரிங் பழுது ஏற்பட்டுள்ளதால் குடிநீர் நீரேற்றும் பணிகள் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் மேற்படி பேரிங் புதியதாக மாற்றவும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும். தோராய செலவினம் ரூ. 75,000/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. **அனுமதி வழங்கலாம்**
2. **குடிநீர் நிதியின் கீழ் செலவிடலாம்**

**நகராட்சி அலுவலகம்** — **தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் (பொ)**

**நாள் – 31. 07. 2019** — **திருவண்ணாமலை நகராட்சி.**

## திருவண்ணாமலை நகரமன்றக் கூட்டம்

## அவசர கூட்ட அறிவிப்பு

**23.07.2019ம் தேதி செவ்வாய் கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ள திருவண்ணாமலை நகரமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்–**

**முன்னிலை : திரு. Y. சுரேந்திரன் BE., தனி அலுவலர் மற்றும் நகராட்சி பொறியாளர் (ம) ஆணையாளர் (பொ) திருவண்ணாமலை நகராட்சி.**

**பொருட்கள்**

**குறள் : –**
**வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனையது உயர்வு**

## தீர்மானம்

**328.** திருவண்ணாமலை நகராட்சி சன்னதி தெருவில் அமைந்துள்ள நகராட்சி பழைய அலுவலக கட்டிடத்தினை நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கல்வி உபயோகத்திற்கென ஒதுக்கி தரக் கோரப்பட்டுள்ள தலைமையாசிரியர், நகராட்சி மகளிர் மேல்நிலைப் பள்ளி, திருவண்ணாமலை அவர்களின் கடிதம் ந.க.எண். 67/19 நாள் 30.05.2019 மற்றும் முதன்மை கல்வி அலுவலர், திருவண்ணாமலை அவர்களின் கடிதம் ந.க.எண். 4533/ஆ2/2018 நாள் 03.06.2019 ஆகியவற்றில் திருவண்ணாமலை நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் சுமார் 3871 மாணவிகள் பயின்று வருகின்றனர் எனவும், கூடுதலாக 350 மாணவிகள் சேர்க்கை எதிர்பார்க்கப்படுகிறது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இக்கடிதத்தில் தமிழக அரசின் அறிவிப்பின்படி 2019–20 ஆம் கல்வியாண்டில் LKG முதல் 5–ம் வகுப்பு வரை துவங்கப்பட்டுள்ளதால் சுமார் 342 பெண் குழந்தைகள் சேர்ந்துள்ளார்கள் எனவும், தற்பொழுது மேல்நிலைப் பள்ளி இயங்கி வரும் கட்டிடத்தில் போதிய இடவசதி இல்லாததால், நகராட்சி பழைய கட்டிடத்தினை திருவண்ணாமலை நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி பயன்பாட்டிற்கென ஒதுக்கி தருமாறும் கோரியுள்ளனர்.

மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை அவர்கள், நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு நகராட்சி பழைய அலுவலக கட்டிடத்தை உபயோகப்படுத்திக் கொள்ள, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட நே.மு.கடிதம் பிசி தனி 11/2019 நாள் : 07.06.2019ல், திருவண்ணாமலை நகராட்சியில் புதிய அலுவலக கட்டிடம் கட்டப்பட்டு இடம் பெயர்ந்துள்ளதால், நிர்வாக வார்டு எண்.22, சன்னதி தெருவில் இயங்கி வந்த பழைய அலுவலக கட்டிடத்தை திருவண்ணாமலை நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு ஒதுக்கீடு செய்யுமாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் கடிதம் ந.க.எண். 25709/2018/தி4 நாள் 02.07.2019 திருவண்ணாமலை நகராட்சி நிர்வாக வார்டு எண்.22, சன்னதி தெருவில் அமைந்துள்ள பழைய அலுவலக கட்டிடத்தை திருவண்ணாமலை நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு ஒதுக்கீடு செய்ய நகராட்சி ஆணையருக்கு விருப்பமா எனவும், விருப்பம் எனில் உரிய மன்றத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பொருள் சம்மந்தமாக கீழ்க்கண்ட விவரஙகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

1. திருவண்ணாமலை நகராட்சி, நிர்வாக வார்டு எண்.22, சர்வே வார்டு எண்.2, பிளாக் எண்.12, சர்வே எண்.620, சன்னதி தெருவில், 42 செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ள பழைய அலுவலக கட்டிடத்தை இடித்துவிட்டு, இவ்விடத்தில் கல்யாண மண்டபம் கட்ட சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை எண்.பி4/25709/2018, நாள்:31.10.2018 உத்திரவின்படி வடிவமைத்தல், கட்டுதல் நிதி, இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் முறையில் நிபந்தனைகளுடன் (Design. Build, Finance, Operate and Transfer) DBFOT Basic of Public Private Partnership (PPP) Mode) நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு நகராட்சி மூலமாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி மேற்கொள்ள ஒப்புதல் கடிதம் (Letter of acceptance) வழங்கப்பட்டு ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
2. திருவண்ணாமலை நகராட்சி சன்னதி தெருவில் பழைய அலுவலகம் இயஙகி வந்த கட்டிடம் 1948 ஆண்டு முதல் 1964 ஆண்டு வரை நகராட்சி பாடசாலையாக செயல்பட்டுள்ளது என இக்கட்டிடத்தில் காணப்படும் கல்வெட்டு குறிப்பில் இருந்து தெரியவருகிறது. திருவண்ணாமலை நகராட்சி பாடசாலையாக இயஙகி வந்த கட்டிடம் 1964 ஆண்டில் நகராட்சி அலுவலகமாக மாற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில், கீழ்க்கண்ட இனஙகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. திருவண்ணாமலை நகராட்சி நிர்வாக வார்டு எண்.22, சர்வே வார்டு எண் 2, பிளாக் எண். 12, சர்வே எண்.620, சன்னதி தெருவில், 42 செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ள நகராட்சி பழைய அலுவலக கட்டிடத்தை திருவண்ணாமலை நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு ஒதுக்கீடு செய்ய அனுமதி கோர நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பரிந்துரை செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
2. திருவண்ணாமலை நகராட்சி நிர்வாக வார்டு எண்.22, சர்வே வார்டு எண். 2 , பிளாக் எண். 12, சர்வே எண். 620, சன்னதி தெருவில், அமைந்துள்ள பழைய அலுவலக கட்டிடத்தை இடித்துவிட்டு வடிவமைத்தல், கட்டுதல் நிதி, இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் முறையில் (Design. Build, Finance, Operate and Transfer) DBFOT Basic of Public Private Partnership (PPP) Mode) கல்யாண மண்டபம் கட்டுவது சம்மந்தமாக நிறைவேற்றப்பட்ட நகர்மன்றத் தீர்மானம் எண். 1036 நாள். 10.09.2018 மற்றும் நகரமன்றத் தீர்மானம் எண். 235 நாள் 07.03.2019 ஆகியவற்றை ரத்து செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பரிந்துரை செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு .** மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண். 2330/2019/எப்1**

**நகராட்சி அலுவலகம்** **தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் (பொ)**
**நாள் – 23.07.2019** **திருவண்ணாமலை நகராட்சி.**